# 3.1 மொழி வெளிக்கோடுகள்


**இலக்கு**

*இச்சிறிய திட்டம் எல்லா அகவை மட்டங்களுக்கும் பொருத்தமானதும், ஓர் ஆக்கநிலையிலே மாணவருக்கு தம் மொழிச் சூழலைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கும், அதேவேளையில் மாறுபாடான மொழிகளுக்கும் தம்முடைய உறவுமுறையில் உருக்காட்டல் கொள்ளவும் (உருக்காட்டும் ஆற்றல்) துணை செய்கின்றது. அதேவேளையில், ஆசிரியருக்குக் கற்பித்தல் செய்யக்கூடிய பயன்தரு கலந்துரையாடல்களுக்கும் வழிசெய்யும்.*

வகுப்பு 1 - 9

30 மணித்துளிகள்

**கருவிகள்:**
ஒரு A4 தாளின் ஒரு ஆண் பிள்ளை அல்லது பெண் பிள்ளையின் வெளிக்கோட்டுப் படம் (அசல் படிகள், பார்க்க ப. 16, 17). நிறப்பென்சில்கள்.



**குறிப்புகள்:**

3.5 இல் விளக்கியபடி இத் திட்டம் மொழி வரலாற்றுத் தலைப்புகளுக்கு பெரிதும் ஒரு முன்னுரையாகப் பொருந்தும்.

**நடைமுறை:**

- ஆசிரியர் நடைமுறையை மிகக் கவனமாக வழிநடத்துவார்: ஆனால் அதிகநேரத்துக்கு அல்ல. நாம் எல்லோரும் பல மொழிகளுக்குள்ளும், பல மொழிகளுக்கிடையிலும் வளர்கிறோம். எங்களுடைய தாய்மொழி, பள்ளியில் பேசும் மொழி, அயலவரால் பேசப்படும் மொழி, விளம்பரங்களில் இருந்து கேட்கும் ஆங்கில மொழி போன்றவை. தாய்நாட்டிலும், வாழிடத்திலும் பயன்படுத்தப்படும் பேச்சுமொழி (உள்ளூர் மொழி) எழுத்துமொழி போன்றவையும் மொழியாக கருதப்படவேண்டும். இம் மொழிகளிற் பலவற்றை நாம் பெரிதும் விரும்பக்கூடும். சிலவற்றை அந்தளவு விரும்பாமல் விடலாம். இந்த மாறுபாடான உறவு முறைகளை தனியான மொழிகளை உடலிற் சில பகுதிகளுடன் ஒப்பிட்டு நோக்குவதனூடாகச் சுட்டிக்காட்டலாம்.
- ஓர் ஆண் அல்லது பெண் பிள்ளையின் வெளிக்கோட்டுப் படமுடைய ஒரு தாளை ஒவ்வொரு பிள்ளையும் பெற்றுக்கொள்கிறது. ஒப்படை: நிறப் பென்சில்களால் நிறங்களின் கதையை உருவாக்குங்கள் (எ.கா. : சிவப்பு = பேச்சுமொழியில் தாய்மொழி நீலம் = எழுத்து வழக்கில் தாய்மொழி பச்சை = குடிபெயர் நாட்டின் மொழி(பேச்சுமொழி) வழக்கு, …, நாவல்நிறம் = ஓர் அயலவர் குடும்பமொழியாக தமிழ், முதலியன.)
- மொழி வெளிக்கோட்டில், ஒரு குறிப்பிட்ட மொழிக்குப் பொருந்தும் விதமாக ஒருபகுதியை தொடர்புடைய நிறத்தினால் தீட்டுக (எ.கா. தாய்மொழி / பேச்சுமொழி இதயத்துக்கு அருகேக் பாடசாலை மொழியான பிரெஞ்சு கைகளுக்கு அருகே, ஏனெனில் அது எனது வேலைக்குப் பின்னர் உதவியாக இருக்கும் என்பதால்) சூழலில் உள்ள பலமொழிகள் உள்ளே பதிவு செய்யப்பட மாட்டா. ஆனால் வெளிக்கோட்டைச் சுற்றி (எ.கா. அயலவரால் பேசப்படும் மொழி, நான் அடிக்கடி அதைக் கேட்கிறேன், ஆனால் அதனால் எனக்கு பயன் ஏதும் இல்லை). பிள்ளைகளுக்கு மிகத் திட்டவட்டமான பரிந்துரைகளையோ முன்மொழிவுகளையோ வழங்கவேண்டாம். வெளிக்கோடுகளை நிரப்புதல் தனித்தனியாக செய்யப்படவேண்டும். அந்நேரத்தில் வகுப்பறையில் முழுமையான அமைதி நிலவ வேண்டும்.
- 10 – 15 மணித்துளிகளுக்குப் பின், மாணவர்கள் ஆளுக்காள் தங்கள் படங்களை விளக்குவர். (முழு வகுப்பிலும் அல்லது குழுக்களாக). ஒரு குறிப்பிட்ட இடத்தில் எந்த மொழியை நான் பதிவுசெய்தேன், எந்த மொழி பதிலை மேற்கொள்வது எந்த மொழி எனக்கு எத்தகைய இன்றியமையாமைகளைக் கொண்டன? ஏன் அது அப்படி?

**மாற்றுகள்:**

மொழிகளை முதன்மையாக மையப்படுத்தி தன்னுருவப் படங்கள்,
சுய விளக்கம் (எனது முதல் மொழி, நான் பேசக்கூடிய மற்றைய மொழிகள், என் சூழலிற் பேசப்படும் மற்றைய மொழிகள் முதலியவை) உருவாக்குதல்.

**உசாத்துணைகள்**

மொழியுருவப் படங்களைக் கண்டுபிடித்த பேராசிரியர் ஹன்ஸ்-ஜுர்கன் க்றும், வீயனிலிருந்து, அவர்களிடமிருந்து ஆழமான செய்திகளை பின்வரும் தொடர்பில் பார்க்க http://www.akdaf.ch/html/rundbrief/rbpdfs/61_Mehrsprachigkeit_Sprachen-portraits.pdf